2013 ஏப்ரல் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பகுதியில் விடுதி கட்டுவதற்கான அவசியமிருப்பின், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 223, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

223—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***3087—திரு. எம். ஆறுமுகம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை பணிவோடு வணங்குகின்றேன். கோவை மாவட்டம், சூலூர் வட்டத்திற்குச் சொந்தமாக வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்ட, சூலூர் வட்டம், சூலூர் கிராமம், புல எண் 543/1ஏ–ல் 0.60.5 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், சூலூர் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு பொதுப் பணித் துறையின் மூலமாக 260.15 இலட்சம் ரூபாய் மொத்த மதிப்பீடு பெறப்பட்டு, 2012–2013 ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டத்தின்கீழ், மாண்புமிகு

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால், முதல் கட்டமாக 70 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, சூலூர் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் பகுதியில் வட்டாட்சியர் அலுவலகம் அமைப்பதற்காக நிதி ஒதுக்கப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன என்ற அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த கட்டடப் பணிகள் இந்த ஆண்டே முடிக்கப்பட்டு செயல்பாட்டிற்கு வருமா? எப்போது செயல்பாட்டிற்கு வரும் என்பதனை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்களில் நிருவாகம் செம்மையாக நடைபெறவும், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்ற எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களினுடைய பயன்கள் விரைந்து மக்களைச் சென்றடைகின்ற வகையிலும், மக்கள் தங்கள் தேவைகளை எளிதில் பெறக்கூடிய வகையிலும், வட்டாட்சியர் அலுவலகங்கள் அமைக்கப்படுவது இன்றியமையாததாக இருப்பதைக் கருத்திலே கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கு வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் படிப்படியாக எடுத்து வருகிறது. இன்றைக்கு தமிழகத்திலே 229 வட்டாட்சியர் அலுவலகங்கள் இருக்கின்றன. அதிலே 208 வட்டாட்சியர் அலுவலகங்கள் அரசு கட்டடத்திலே இயங்கி வருகின்றன. மீதியுள்ள 21 கட்டடங்களுக்கும்*

2013 ஏப்ரல் 15]

படிப்படியாக அம்மா அவர்களுடைய அரசு, நிதி ஒதுக்கீடு செய்ய உள்ளது. அவற்றில் 12 கட்டடங்களுக்கு ஏற்கெனவே நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, தொண்டர்களை மட்டுமல்ல, தோழமை உணர்வு கொண்டவர்களையும் நேசிக்கிற அரசாக அம்மா அவர்களுடைய அரசு விளங்கிக் கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, சூலூர் வட்ட வட்டாட்சியர் அலுவலகக் கட்டடப் பணிகள் இந்த ஆண்டிலேயே கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் திறந்து வைக்கப்படும் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) பணிவோடு தெரிவித்து, பிற துறை அலுவலகங்களும் கட்டப்படுமா என்கின்ற ஒரு வினாவையும் எழுப்பியிருக்கின்றார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துருக்கள் முறையாகப் பெறப்பட்டு, தேவையிருப்பின், பிற துறை அலுவலகங்கள் கட்டுவதற்குண்டான நடவடிக்கைகளையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் ஆறுமுகம் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, நீங்கள் கையகப்படுத்தியிருக்கக்கூடிய இடங்களில் வட்டாட்சியர் அலுவலகங்கள் மட்டுமல்ல, தாலுகாவாக அறிவித்து இருக்கக்கூடிய அந்தப் பகுதியில் தீயணைப்புப் படை, டி.எஸ்.பி. அலுவலகம், இன்னும் இருக்கக்கூடிய இதர அலுவலகங்களையும் அந்த வளாகத்திற்குள்ளேயே கட்டுவதற்கான வாய்ப்புகள் அரசினுடைய செயற்குறிப்பில் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 ஏப்ரல் 15

முற்பகல் 11–40

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்துருக்களைப் பெற்று, தேவையிருப்பின், பிற துறை அலுவலகங்களைக் கட்டுவதற்குண்டான நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 224, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

224—

ஆரம்ப சுகாதார நிலையம்

***7268—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், கீரப்பாளையம் ஒன்றியம், கலியமலை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியம், கலியமலை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*